திரு. த. ரத்தினவேல் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவெறும்பூர் தொகுதியில் வேங்கூர் கிராமம் என்பது, திருச்சியிலே இருந்து 15 கிலோ மீட்டர் தூரத்திலே உள்ளது. அங்கு இரண்டாயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் வசித்து வருகிறார்கள். அதனைச் சுற்றிலும், முறுக்கூர், கீழ முறுக்கூர், சாமிநாதபுரம், மாதாகோவில் போன்ற சிறுசிறு கிராமங்களில், ஆயிரத்திற்கும் மேற்பட்ட ஆதிதிராவிடர்கள் வசித்து வருகிறார்கள். மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் பொற்கால ஆட்சியில், அந்தப் பகுதி மக்களுக்குப் பயன்படுகிற வகையில், புதிய பேருந்து, இந்த ஆண்டு இல்லையென்றாலும், வருகிற ஆண்டிலாவது இயக்கப்படுமா என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களின் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த வழியாக ஏறத்தாழ 80 சிங்கிள்கள், தீரன் சின்னமலை போக்குவரத்துக் கழகத்தின் சார்பாகவும், தனியார் சார்பாகவும் இயக்கப்பட்டு வருகின்றன. அங்கே ஜனத்தொகை 500 பேர் இருக்கிற காரணத்தினால்தான், தனியாகப் பேருந்துகள் இயக்க முடியாது என்று நான் குறிப்பிட்டேன். மாண்புமிகு உறுப்பினருடைய உணர்வுகளை மனதிலே கொண்டு, மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் அரசு, ஆயிரம் மக்கள் தொகை கொண்டிருக்கிற, சாலை சீரமைப்பு செய்யப்பட்டு பேருந்து செல்ல வசதியாக இருக்கிற இடங்களுக்கெல்லாம், பேருந்துகள் இயக்க நடவடிக்கை மேற்கொண்டிருக்கிறது. அடுத்த கட்டப் பணியாக, 500 மக்கள் தொகை இருக்கிற இடத்திற்கு அதுபோன்ற பணிகளை நாம் மேற்கொள்ள இருக்கிறோம். ஆகவே, அந்தக் காலகட்டத்தில், உங்களுடைய கோரிக்கை நிறைவேற்றப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 166, திருமதி செ. சுந்தராம்பாள், மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்.

166—

கொளத்தூர் ஒன்றியம், சாம்பார்பள்ளத்தில் அணை கட்டுதல்

*9247—திருமதி செ. சுந்தராம்பாள் :

மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[*1995 மார்ச் 30*

(அ) மேட்டூர் தொகுதி, கொளத்தூர் ஒன்றியத்தில் சாம்பார்பள்ளத்தில் சிறு அணை ஒன்று கட்ட அரசு முன்வருமா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது ?

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் *(ஆ)* : சாம்பார்பள்ளத்தில் அணை கட்ட இயலாது. ஆயினும் கசிவு நீர்க் குட்டை அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளது.

திருமதி செ. சுந்தராம்பாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சிறு குட்டை கட்டுவதாகக் கூறியுள்ளார்கள். மேட்டூர் தொகுதி கொளத்தூர் ஒன்றியத்தில், சாம்பார் பள்ளத்தில் சிறு அணை ஒன்று கட்டினால், அதைச் சுற்றிலும் இரண்டாயிரத்திற்கும் மேற்பட்ட ஏக்கர்கள் பாசன வசதி பெற்று, அங்குள்ள விவசாயிகள் நலம் பெறுவார்கள். விவசாயத் துறையைச் சார்ந்த, விவசாயப் பெருங்குடி மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கு பல எண்ணற்ற திட்டங்களைத் தீட்டியுள்ள சமூக நீதி காத்த வீராங்கனை, மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களின் ஆட்சிக் காலத்தில், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அங்கே சிறு அணையைக் கட்டுவதற்கு மறுபரிசீலனை செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

முற்பகல் *10.15*

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே இது சம்பந்தமாக திட்டம் மற்றும் வடிவமைப்புத் தலைமைப் பொறியாளர் i.e. Planning and Designs Chief Engineer, ஒரு ஆய்வு செய்துள்ளார். அந்த இடத்திலே அணை கட்டுவதற்கு சாத்தியக் கூறுகள் இல்லையென்று தெரிவித்துள்ளார். இருந்தாலும், *1988-89* ஆம் ஆண்டு விலை விகிதப்படி *7* இலட்சத்து *90* ஆயிரம் ரூபாய்க்கு ஒரு திட்டம் தயாரித்து கசிவுநீர் குட்டை கட்டுவதற்காக நில நிர்வாக ஆணையர் மூலமாக அரசுக்கு அனுப்பியிருக்கிறார். இது சம்பந்தமாக ஏறத்தாழ *5* ஏக்கர் நிலம் ரிசர்வ் பாரஸ்ட் இடங்களைக் கையகப்படுத்த வேண்டியிருக்கிறது. அவர்களிடத்திலே நாம் கேட்டிருக்கிறோம். காட்டு இலாக்கா நிலங்களை நாம் கையகப்படுத்துகின்றபோது அவர்களுக்கு இரு மடங்கு நிலங்களைத் தந்தாக வேண்டும். ஆகவே, இது சம்பந்தமாக வனத் துறைக்கு எழுதியிருக்கிறோம். அவர்கள் ஒப்புதல் பெற்றவுடனே அதற்கு மத்திய அரசிடத்திலேயிருந்தும் ஒப்புதல் பெற வேண்டும்.

1995 மார்ச் 30]

அதற்குப் பின்னாலேதான் அந்தக் கசிவுநீர் குட்டை கட்டுவதற்கான பணியை ஆரம்பிக்க முடியும். இதுதான் முழு விவரம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. க. அர்ச்சுனன்.

திரு. க. அர்ச்சுனன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த சாம்பார்பள்ளத்திலே மேற்குத் தொடர்ச்சி மலையிலிருந்து அதிகப்படியான தண்ணீர் வந்து வீணாகின்றது. எந்த அளவிற்கு தண்ணீர் வருகிறது என்பதனை ஆய்வு மேற்கொண்டு அந்தப் புள்ளிவிவரங்களை எடுத்திருக்கிறார்களா ? வீணாகக் கூடிய தண்ணீரைப் பயன்படுத்தக்கூடிய வகையிலே அணையைக் கட்ட அந்தப் பகுதியிலே 2 ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்பிலே பாசன வசதி செய்வதற்கு, அங்கே வன இலாக்காவினுடைய நிலங்களை எடுத்துக்கொள்வது மட்டுமல்ல; சில பட்டா நிலங்களைக்கூட எடுக்க வேண்டிய நிலை இருப்பதாக தெரிகிறது. எனவே, கசிவுநீர் குட்டை என்று சிறிய அளவிலே முடித்துவிடாமல், இன்னும் சில ஆண்டுகளுக்குப் பிறகாவது ஒரு அணையைக் கட்டுவதற்கான முடிவை அரசு எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே அந்தப் பகுதியிலே ஆய்வு செய்துதான் நம்முடைய திட்டம் மற்றும் வடிவமைப்புத் தலைமைப் பொறியாளர் அணை கட்ட இயலாது என்று தெரிவித்திருக்கிறார். அதற்குப் பிறகுதான் அந்தப் பகுதியிலே இந்த அளவுக்கு வீணாகின்ற தண்ணீரை வேறு வகையிலே சேமித்து வைக்க முடியுமா என்று ஆய்வு செய்துதான் கசிவுநீர்க் குட்டை கட்ட வேண்டுமென்று முடிவு எடுத்து அதுசம்பந்தமாக ஏற்கெனவே நான் தெரிவித்த விவரங்களையெல்லாம் அவர்கள் ஆய்வு செய்து அரசுக்கு அனுப்பியிருக்கிறார்கள். அதுதான் நிலை என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 167, திரு. ஆர். ஈஸ்வரன், இருக்கையில் இல்லை.

வினா எண் 168, திருமதி ரமணி நல்லதம்பி, இருக்கையில் இல்லை. (குறுக்கீடு).

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னை கேட்க விடமாட்டீர்கள். நானும் காங்கிரஸ் எம்.எல்.ஏ. தானே ? சப்ளிமென்டரி கேள்விதானே கேட்கப் போகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அந்த ஊர் எங்கே இருக்கிறது என்று தெரிந்து அல்லவா கேட்க வேண்டும். சப்ளிமென்டரி அந்த ஊரைப் பற்றிதான் இருக்க வேண்டும். (குறுக்கீடு) இது முறை அல்ல. பொதுவான கேள்வியாக இருந்தால் வேறு உறுப்பினர்களை அனுமதிப்பது வழக்கம். ஆனால் கேள்வி அந்தத் தொகுதியைச் சார்ந்தது, ஒரு குறிப்பிட்ட ஊரைச் சார்ந்த பிரச்சினை. மற்ற உறுப்பினர்களுக்கு அதில் என்ன தெரியும் ?

வினா எண் 169, திரு. க. அர்ச்சுனன், மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர்.

169—

தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் மூலம் கடன் வழங்குதல்

***15464**—திரு. க. அர்ச்சுனன் :*

மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழக மாவட்டக் கிளைகளில் ரூபாய் இரண்டு லட்சத்திற்குக் கீழ் கடன் கொடுப்பது நிறுத்தப்பட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு.துரை ராமசாமி, ஊரகத் தொழில் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) தற்சமயம் இவ்வகைக் கடன்கள் தமிழ்நாடு தொழில் கூட்டுறவு வங்கியின் வரம்பில் அரசால் கொண்டு வரப்பட்டுள்ளதால், தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத்தின் பங்கு குறைந்துள்ளது.

திரு. க. அர்ச்சுனன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது இரண்டு இலட்சம் ரூபாய்க்குக் கீழே சிறிய தொழிலை செய்பவர்கள்தான் அதிகமாக இருக்கிறார்கள். தொழில் துவங்குபவர்களை ஊக்குவிக்கின்ற வகையிலே ஏற்கெனவே 50 ஆயிரம் ரூபாய்க்குக் கீழே இருப்பவர்களுக்கு மட்டும் இந்தத் தொழில் முதலீட்டுக் கழகத்தின் மூலமாக கடன் வழங்காமல் இருந்தது. இப்போது அந்த 50 ஆயிரம் என்பது 2 இலட்சமாக ஆக்கப்பட்டிருக்கிறது. அதனால் பலபேர்,